மீண்டும்

# கவிக்கொண்டல்

சிறப்பாசிரியர் : சா. கணேசன் ஆசிரியர் : மா. செங்குட்டுவன்

மலர் 14
இதழ் 6

நவம்பர்
2005



## இலக்கியத் திங்கள் இதழ்

விலை
ரூ 6/-

முகப்பு அட்டைப்பட நாயகர்

# செந்தமிழ்க் காவலர் சி. இலக்குவனார்

- இலக்கியச் செம்மல் இரா. இளங்குமரனார்

ஒளிபடைத்த கண்; உறுதி கொண்ட நெஞ்சு; களிபடைத்த மொழி; கடுமை கொண்ட தோள்; தெளிவு பெற்ற மதி; சிறுமை கண்டு பொங்கும் உணர்வு; எளிமை கண்டு இரங்கும் அருள்; ஏறுபோல் நடை; நொய்மையற்ற சிந்தை; நோய்கள் அற்ற உடல்; கற்ற ஒன்று பொய்க்காமை; கருதியது இயற்றுதல் – இக்கருத்துப் பொருள்களை யெல்லாம் ஒன்றாகக் கூட்டி வண்ண ஓவியம் வனப்புறத் தீட்டி வைத்தாற் போன்ற திருவுருவினர் பெரும் பேராசிரியர் சி. இலக்குவனார்.

ஆறடி உயரம், முழந்தாளைத் தொடும் கை, தும்பைப்பூப் போன்ற மேலாடை, அதனை ஒத்த முழுக்கைச் சட்டை, நல்ல மெல்லுடை, கவர்ச்சி மிக்க மீசை, எடுப்பான நெற்றி, அமைந்த ஆழமான பார்வை, புன்முறுவல் சுரக்கும் மலர்முகம், கனிவு மிக்க நோக்கு, உள்ளொன்று புறமொன்று அறியா உரை, பகை எண்ணாப் பரிவு, தீயதை உடன் மறக்கும் திருவுளம், இங்கு அங்கு இவர் அவர் என்னாமல் எங்கும் எவர்க்கும் ஐயம் அகற்றித் தெளிவிக்கும் தேர்ந்த நடையிடும் பல்கலைக் கழகம் இலக்குவனார்.

இராமேச்சுரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோவில்களில் கண்கவர் எழிலுடன் திகழும் இலட்சுமணன் சிலை யினைக் கண்டு, கண்களி மயக்கம் கொண்ட தாய்வழிப் பாட்டியார் பல்காலும் தோய்ந்து நின்று மகள் வழிப்பெயரனுக்குச் சூட்ட விரும்பிய பத்திமைப் பெயரே இலட்சு மணன் என்பது.

உள்ளூரில் ஓர் ஆசிரியர் பெயர் இலட்சுமணன். அவர் வறுமைக்கோலம் இப் பெயரைப் பெருமைப் படுத்தவில்லை. அவர் பெயரையா வைப்பது என்று வருந்த வும் செய்தனர். “அதனால் பாட்டியார் மகள் வழிப் பேரனாகிய எனக்கு ‘இலட்சுமணன்’ என்னும் பெயரைச் சூட்டினார்” என்கிறார் இலக்குவர்

மொழிமரபும் மொழி பெயர்ப்பு மரபும் போற்றி வழிகாட்டிய பெரும்பாவலர் கம்பர், இலட்சுமணனை ‘இலக்குவன்’ என ஆக்கினார். அன்றியும் இலக்குவன் ஆற்ற லையும் இராமன் வாயிலாக,

**“இலக்குவ உலகமோர் ஏழும் ஏழும்நீ**
**கலக்குவன் என்பது கருதி னாலது**
**விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ?”**

என்றும் கூறினார்.

அப் பெயரை அறிஞர் சாமி. சிதம்பரனார் தமக்குச் சூட்டியதையும், அப் பெயர்க்குக் குறிக்கோளை உடையவன் எனத் தாம் பொருள் கொண்டதையும் பேராசிரியரே கூறுவதை முன்னா அறிந்துளோம்.

தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் (இப்போது நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரணியம் வட்டம்) ‘வாய் மேடு’ எனப்படும் ஊர் உளது. ‘வாய்மை மேடு’ என்பதே வாய்மேடு ஆயது என்பர்!

‘வாய்’ என்பது கால்வாய், கண்வாய், வாய்க்கால் என்பவற்றில் வருதலை அறியலாம். நீர்நிலை சார்ந்த இடம் வாய் ஆகும். வாய்த்தலை, சித்தலைவாய், பெட்டவாய்த்தலை என்பவை நீர்க்கரை சார் ஊர்கள். நீர்க்கரை சார்ந்த மேட்டுநில ஊர் ‘வாய்மேடு’ என்பதை இயற்கையொடு பொருந்தக் காண இனிக்கிறது. நம் முன் னோர் இட்ட ஊர்ப்பெயர்களின் பொருட்

சிறப்பையும் விளக்குகிறது. வாய்மேடு சென்று கண்டதால் ஏற்பட்ட தெளிவு இது.

வாய்மேட்டில் தாளாண் சிறந்த வேளாண் தொழிலராய் விளங்கியவர் அம்பலவாணர். அவர் மகானர் சிங்கார வேலர். அவர்தம் அருமைத் துணைவியார் கொண்டங்காட்டு அரங்கசாமியார் மகளார் அரதனம் (இரத்தினம்) அம்மையார். இவர்கள் சீரிய இல்லற வாழ்வில் 17.11.1910ஆம் நாள் (சௌமிய ஆண்டு கார்த்திகை முதல் நாள்) இலக்குவர் பிறந்தார். இவர் மூன்றாம் திருமகனார்.

வாய்மேட்டில் திண்ணைப் பள்ளியில் தொடக்கக் கல்வி பெற்றார் இலக்குவர். அரசர் மடத்தில் (இராசாமடம்) நடுநிலைக் கல்வி பெற்றார். ஆங்கு மாணவர் நலங்களைத் தேர்ந்து தேர்ந்து பணி செய்த பெருந்தகை சோமசுந்தரர் தலைமையாசிரியராக இருந்தார். பொது அறிவு கற்பிக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தவர் சாமி. சிதம்பரனார். அவர்தம் அணுக்கரானார் இலக்குவர்.

சிதம்பரனாரின் பகுத்தறிவுக் கோட்பாடுகளும், சீர்திருத்தக் கருத்துகளும் தனித்தமிழ் நாட்டமும் இலக்குவரிடம் கால்கொண்டு தளிர்த்தன. சோம சுந்தரர் உரத்தநாட்டிற்குத் தலைமையாசிரியராக மாறிச் சென்றார். அவர் பணி செய்த அரசர் மடத்திற்கு நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் உடன்பிறந்த ந.மு. கோவிந்தராசர் தலைமையாசிரியராக வந்தார். அவர் சிவனியத்தில் பெரும் பற்றாளர். அவரால் தோற்றுவிக்கப்பட்டது 'கண்ணுதலார் கழகம்', அக் கழகப் பணியிலும் பெரும் பங்கு கொண்டார் இலக்குவர்.

சீர்திருத்தம் ஒருபால்; இறைமை ஒருபால்; இவ்விரண்டும் ஒன்றிய சீர்திருத்த இறைமை இலக்குவர் வாழ்நாள் குறிக் கோளாகக் கொள்ள வாய்த்த பயிற்சிக் களமா யிற்று இது. முற்போக்கு, சரியானதாக இருப்பின் இறைமையை முட்டாது. இறைமை செவ்விதாக இருப்பின் முற்போக்கை முட்டாது. மறைமலையடிகள், திரு.வி.க., தமிழ்க்காசு, பாவாணர் எனப் பெரும் பட்டியலிட்டுக் காண்பார் கண்டுகொள்வார். அவ்வரிசையில் ஒருவராக இலக்குவர் வளர வாய்த்த நிலை இது.

அரசர் மடத்தில் மூன்றாம் படிவம் முடித்தவர். உரத்தநாட்டு உயர்பள்ளி சென்று பயில்வர். அவ்வாறே இலக்குவரும் அவண் சென்று பயின்றார். ஆங்குத் தமிழாசிரியராக இருந்தவர் பொன்னண்ணாக் களத்தில் வென்றார் என்னும் பெருந்தகை யார். அவர் தமிழ்மணம் உண்டு உயிர்த்த தன்றித் திருமணம் கொண்டவரல்லர். அகவை முதிர்ந்த காலையிலும் ஆங்கிலம் கற்கும் அவாமீக்கூர்ந்து மாணவர் இலக்கு வரிடம் விடுமுறைக் காலங்களில் அறுசுவை அமுதும் அருந்தமிழ் அமுதும் ஊட்டி ஆங்கிலம் கற்று வந்தார். பள்ளிப் பருவத் தில் மேற்கொள்ளப்பட்ட இவ் வாய்ப்புகள் எல்லாம் பின்னாளில் பெருவெள்ளமாகப் பெருகியமை தமிழ் உலகு நன்கு அறிந்ததாம்.

சரபோசி மன்னர் அறக்கட்டளையால் உண்டுறை விடுதிகளுடன் இயங்கி வந்தவையே அரசர் மடம், உரத்தநாட்டுப் பள்ளிகள். அப்பள்ளி விடுதிகளில் தங்கிப் பயின்ற இலக்குவர், பள்ளி இறுதித் தேர்வில் சிறப்புறத் தேறினார். புலவர் தேர்வு பெறு வதற்காகத் திருவையாற்று அரசர் கல்லூரி யில் சேர்ந்தார். ஆங்கும் உண்டுறை விடுதி வாய்ப்பு இருந்தது. அப்பொழுது அண்ணா மலை பல்கலைக்க கழகத்தில் பணி செய்து கொண்டிருந்த சுப்பிரமணிய சாத்திரியார் திருவையாற்றுக் கல்லூரி முதல்வராக வந்து சேர்ந்தார். திருவாளர்கள் உலகநாதபிள்ளை, சந்தான ஐயங்கார், சோமசுந்தர தேசிகர், இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, கரந்தைக் கவியரசு அரங்க. வேங்கடாசலம் பிள்ளை முதலியோர் பேராசிரியர்களாக விளங்கினர்.

அந் நாளில் இலக்குவர்க்கு நண்பர் களாகவும் துணைவர்களாகவும் இருந்த மாணவர்கள் அ. கிருட்டினமூர்த்தி, அன்பு கணபதி, முருக இலக்குவன் என்பார். நால் வரும் இணைந்து மாணவரிடையே தூய தமிழ்ப்பற்றை வளர்க்க வேண்டும் என்று

திட்டமிட்டனர். ஏசு சமயத் தொண்டர்கள் போல் ஊர் ஊராகத் தெருத் தெருவாகச் சென்று சொற்பொழிவாற்றுதலைத் திட்ட மிட்டு மேற்கொண்டனர்.

கல்லூரித் திருவள்ளுவர் மாணவர் கழகச் செயலாளராக மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் முதல்வர் இட்ட முட்டுக்கட்டையால் எச் செயலும் செய்ய இயலாச் செயலராகவே இலக்குவர் இருக்க நேர்ந்தது.

பொதுப்பணியைத் தடுத்த அவரால், புலமைப் பணியைத் தடுக்க முடியாதே! இலக்குவர் அரசர் கல்லூரியில் பயிலும் போதே இலக்கணப் பயிற்சியிலும் மொழி இயல் ஆராய்ச்சியிலும் மிக ஈடுபட்டார். தொல்காப்பியர் காலத்தை ஆய்ந்து கட்டுரை எழுதி இதழில் வெளியிட்டார். அவ்வப் போது பாடல்களும் இயற்றினார். புதுக் கோட்டையில் ஒன்பான் இரவு (நவராத்திரி) விழாவின் சார்பில் நிகழ்த்தப்பட்ட தமிழ்ப் புலமைப் போட்டியில் முதன்மை பெற்று முப்பது வெண்பொற்காசுகள் பரிசு பெற்றார். புலவர் தேர்வில் கல்லூரியில் முதல் மாணவ ராகத் தேர்ச்சியடைந்தார்.

புலவர் படிப்பால் பெற்ற பயன் என்னை?

''தமிழகத்தின் உரிமைக்கும், தமிழ் மொழியின் உயர்வுக்கும் உழைப்பதே எனது உறுகடனாம் என்று உறுதி கொள்ளச் செய்தது. தமிழ்ப் போரே எனது வாழ்க்கைப் போர் என்னும் குறிக்கோளை வாழ்வின் உயிராக ஏற்றுக்கொண்டேன். புலவர் படிப்பால் பெற்ற பயன் இஃதேயாம்'' என்பது இலக்குவனார் வாய்மொழி.

புலவர் சான்று பெற்றதும் மாவட்டக் கழக உயர்பள்ளியில் தமிழாசிரியராகப் பணி தொடங்கினார்; பணி செய்து கொண்டே மேல்பட்டம் பெறுவதற்குரிய வழிகளிலும் முயன்றார்; தமிழ்த்தொண்டு களிலும் தனி ஆர்வத்தோடு ஈடுபட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றவர் கல்லூரி இடை நிலை வகுப்பு முதற்பகுதி ஆங்கிலத்தையும், இளங்கலை வகுப்பு முதற்பகுதி ஆங்கிலத் தையும் கற்றுத் தேர்வு எழுதி வெற்றி பெற்று, ஏதேனும் இரண்டு தகுதிச் சான்றிதழ்த் தேர்வுகளிலும் *(Certificate of Proficiency)* தேர்ச்சி பெற்றால் கீழ்த்திசைக் கல்வி இளங்கலைப் பட்டம் *(B.O.L.)* பெறலாம் என்ற விதி இருந்தது. அதன்படி பி.ஓ.எல். பட்டம் பெற்றார். அப் பட்டம் பெற்றார்க் குப் பின்னர் எம்.ஏ. பட்டமும் வழங்கப் பட்டது. அதனால் பி.ஓ.எல்., எம்.ஏ., என்னும் இரு பட்டங்களுக்கும் உரியவரானார் இலக்குவர்.

அதன்பின், தமிழ்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் *(Origin and Growth of Tamil Language)* என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். அகவை ஐம்பது கடந் தாலும் அயர்வின்றித் தொல்காப்பியம் முழு வதையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆராய்ச்சி முன்னுரையும் விரிவாக எழுதி முனைவர் பட்டமும் பெற்றார்.

தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மேனாட்டவரும் வியக்கச் செயலாற்றிய திறமும் பெருமிதமும் பேராசிரி யர்க்கு வாய்த்தமை பெரும் புகழ்ச் செல்வ மாகத் தமிழுக்கு ஆயிற்று. அவர்தம் தொல் காப்பியப் பெயர்ப்பு. பேரறிஞர் அண்ணா 'ஏல்' என்னும் அமெரிக்கப் பல்கலைக் கழகத் தில் பலரும் வியக்கப் பாடம் சொல்லும் கருவியாகத் திகழ்ந்தது. இத்தகு மொழி பெயர்ப்பொன்றை அறிஞர் கால்டுவெலார் கண்டிருப்பாராயின் அப்பயன் உலகமுதன் மொழி தமிழே என்று அவரை அறைகூவ வைத்திருக்கும். 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்பதற்கு ஏற்பச் செய்யப்பட்ட அருமையுடையது அது.

அம்மட்டோ! தமிழ்மொழி மேலும், தமிழர் பண்பாட்டு மேலும் பிறர் பிறரால் ஏற்றப்பட்டிருந்த மாசுகளின் வழியாகத் தொல்காப்பியத்திலும் மாசேற்றப்பட் டிருந்தது. தமிழ்நெறிக்கு மாறாகச் சொல்லப்

பட்ட – உரை காணப்பட்ட, அவற்றின் அழுக்கை அறவே துடைத்து மேலைநாட்டு ஆய்வியல் அறிஞர்களின் எண்ணத்தில் படிந்திருந்த கறைகளையும் மாற்றினாலன்றி இலக்குவர் ஆய்வு ஏற்கப்படுமாறு இல்லை. தடைகளாகப் பத்தொன்பது குறிப்புகளைக் காட்டி ஆய்வு ஏட்டை ஏற்கத் தடை கிளத்தினர்.

இலக்குவரின் அயரா உழைப்பும் அசையா உறுதியும் கூர்த்த புலமையும் அவர்கள் தடைகளையெல்லாம் உடைத்து வெற்றியை வழங்கியது.

இயல்பான சுவரிலோ, திரையிலோ ஓவியம் தீட்டும் எளிமையும் இனிமையும், கறையாக்கப்பட்ட சுவரிலோ திரையிலோ ஓவியம் தீட்டும்போது ஏற்படா அல்லவோ! தமிழ்மேல் ஏற்றப்பட்ட பொய்மைப் புனைவு, அயன்மொழி வல்லாண்மை ஆட்சி என்பு வற்றை மேனாட்டார் அறிந்து ஒப்புக் கொண்டு ஏற்பளிக்கச் செய்த இலக்குவனார் ஆய்வை, நாட்டுப்புறப் பாடலையோ, ஒரு கதையையோ எடுத்துக்கொண்டு பட்டம் பெறுவார் எட்ட முடியுமா?

பேராசிரியர் இலக்குவனாரின் தமிழ்ப் பணி 1936ஆம் ஆண்டில் திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் தொடங்கியது. ஆறாண்டுகள் தஞ்சை மாவட்டக் கழகப் பள்ளிகளில் பணியாற்றினார். அதன்பின் ஈராண்டுகள் திருவையாற்று அரசர் கல்லூரி யில், மூன்றாண்டுகள் திருநெல்வேலி, மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரியிலும், 5 ஆண்டுகள் விருதுநகர், செந்திற்குமார் நாடார் கல்லூரியிலும் விரிவுரை யாளராகவும் பேராசிரியராகவும் தமிழ்த் துறைத் தலைவராகவும் பொறுப்பு முதல்வ ராகவும் பணி செய்தார்.

1952இல் விருதுநகரில் இருந்து வெளி யேற்றப்பட்டு ஓராண்டு திருவெறும்பியூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளித் தலைவ ராகவும் ஈராண்டுகள் ஈரோடு மகாசனக் கல்லூரி விரிவுரையாளராகவும், மூன்றாண்டு கள் நாகர்கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி யில் தமிழ்த்துறைத் தலைவராகவும், *ஆறாண்டுகள் மதுரைத் தியாகராசர் கல்லூரி* யில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணி புரிந்தார்.

இக் காலத்தே, பேராசிரியர் மதுரை யில் நிறுவிய அமைப்பு – தமிழ் வளர்ச்சி அமைப்பு – தமிழ்க் காப்புக் கழகம் அதன் தொண்டின் பயன்பாடு தமிழுக்குப் பேருதி யமாயிற்று. தமிழ், பேராசியர்களுக்கும், புலவர்களுக்கும், பொழுது போகாத முதியவர்களுக்கும் உரிய பொருள் அன்று. அது கூலி வேலைக்காரருக்கும், கூவி விற்கும் வணிகருக்கும், வண்டியோட்டு நர்க்கும், வயல் வேலை புரிவார்க்கும், கல்லார்க்கும் கற்றார்க்கும் ஒரு பேரிறை எனத், தமிழ்ப் பற்றாளர் அனைவருக்கும் உரிய பொதுப் பொருள் என நாட்டியது அக் கழகம். புலவர் தேர்வுக்கும், புலமை வளர்ச்சிக்கும் கற்பித்ததுடன் வணிகர் விளம்பரப் பலகையா, செய்தித்தாள்களா இவற்றைத் தூய தமிழாக்கப் பாடுபட்டது. ஆட்சியாளரின் அடக்குமுறையால் பேராசிரியர் மேற்கொண்ட பயிற்று மொழி நடைத் திட்டம் நடைபடாமலே பாதுகாப்புச் சிறை யில் மூன்றரைத் திங்கள் வதியவும், பதவியை இழக்கவும் ஆயது. அரசும் தன் ஆணவ அடக்குமுறைப் பயனாகப் பதவி இழந்தது. 1967இல், அறிஞர் அண்ணா பதவியேற்ற பின் வேலை இழந்த பேராசிரியர்க்குச் சென்னை மாநிலக் கல்லூரியில் பணி வாய்த்தது. ஓராண்டு அவண் பணி செய்தார். பின்னர் ஐதராபாத்து உசுமானியா பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராக ஈராண்டு கள் பணி செய்தார். அதன்பின் நாகர் கோவில் தெ.தி. இந்துக் கல்லூரி முதல்வராகி ஓய்வு பெற்றார். ஓயாது உழைக்கும் பிறவிக்கு ஓய்வு உண்டா?

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்குச் செல்லும் தகுதிகள் எல்லாம் பெற்றிருந்தும் அரசியல் வண்ணமாகிவிட்ட மாநாடுகளில் தக்கார்க்கு இடம் வாய்க்குமா?

அதனால், பேராசிரியர் தாமே வெளி நாட்டுச் செலவு மேற்கொண்டு 2.10.71 முதல் 25.12.71 முடிய சிங்கப்பூர், மலேயா முதலிய நாடுகளில் மொழி இன நலப் பொழிவுகள் செய்தார்.

ஓடி ஓடிப் பணிசெய்த பேராசிரியர் தம்மை ஒட்டாமல் ஒதுக்கப்பட்ட ஒதுங்கிக் கிடந்த நோய்கள் ஒன்றொன்றாய்த் தலை தூக்கி எழுந்தன. சருக்கரை நோய் வளர்ந்தது; தாக்கியது; கால் பெருவிரலில் குருதி கொட்டி ஆறாப்புண் ஆயிற்று. அவ் விரலை எடுத்து விடும் கொடுந்துயரும் ஆயிற்று. மஞ்சள் காமாலை, கல்லீரல் அழற்சி, சிறுநீரகக் கேடு ஆகியனவும் தொடர்ந்தன. ஆயினும் அச்சம் எனும் ஒரு பொருள் அறியா அடலேறு, "எமக்கொன்றும் இல்லை; விரைவில் நலம் பெறுவோம்; நம் தொண்டுகள் தொடரும்" என்று வந்தவர்க்கெல்லாம் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். இளங்கோவடிகள் மொழியின் படி 'வாயல் முறுவல்' காட்டி, வருதுயர் மறைத்தார். ஆனால், அந்தோ! அன்பே உருவான மனைவியரும், நண்பர்களும் புலம்பி நைய 3.9.1973 இரவு 10 மணியளவில் மதுரை அரசினர் மருத்துவமனையில் பேராப் பெருநிலையுற்றார்.

வாய்மேட்டு வண்டமிழ்ச் செல்வர் திருவுடலம் திருநகர் இல்லத்தில் பொது மக்கள் பார்வைக்கென வைக்கப் பெற்றது. பல்வேறு கல்லூரிகள் அமைப்புகள் அன்பர்கள் சார்பிலே மலர் மாலைகள் சூட்டப்பெற்றன.

மாநகரத் தந்தை முத்து, அமைச்சர் என்.வி. நடராசன் ஆகியோர் வந்து ஆறுதல் கூறி மாலை சூட்டிச் சென்றனர். இல்லத்தினர் இனிய நண்பர்கள் கண்ணீர் அரற்றல்களுக்கு இடையே 4.9.1973 பகல் 11 மணியளவில் தமிழுக்கெனவே வாழ்ந்த அத்திருவுடலம் எடுக்கப்பட்டு, திருப்பரங்குன்றம் சுடலைக் கானம் கொண்டு செல்லப்பட்டது. முனைவர் சுப. அண்ணாமலை அவர்கள் தலைமையில் பேராசிரியர்கள், புலவர்கள், அன்பர்கள் நெஞ்சுருகி நின்று இரங்கலுரையாற்றினர். பேராசிரியரின் மூத்த திருமகனார் திருவேலனார் "தமிழ் நன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடும் ஓங்க நிற்பார்" உடலை ஒளியுடலாக்கினார். "எம் நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே" என ஒன்றி நின்றவர்கள், களிறு அகன்று போகக் கட்டுத்தறியைக் கண்டு கரைந்து அழுவார் போல் ஆயினர். இரங்கல் கூட்டங்கள் நிகழ்ந்தன. இரங்கல் மலர் வெளியிடப்பட்டது. பேராசிரியர் நடைத்திட்டம் இடைவிட்டு இடைவிட்டுத் தொடர்கின்றது. பொதுமக்களும் அரசும் கண் திறந்து பயிற்றுமொழி தமிழே என்பதை நிலைநாட்டும்போது முதன்மையாகப் புன்முறுவல் பூப்பவராகத் திகழ்பவர் ஒளியுருவ இலக்குவனாரே.

*(செந்தமிழ்க்காவலர் சி. இலக்குவனார் என்னும் நூலிலிருந்து...)*

## பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவருக்கு விருது!

தஞ்சாவூரில் 8,9.10.2005 ஆகிய இரண்டு நாள்கள் செம்மொழி அறிவிப்பு ஓராண்டு விழா. தமிழர் தந்தை சி.பா. ஆதித்தனார் நூற்றாண்டு விழா, தமிழ் உணர்வு எழுச்சி மாநாடு ஆகியவை நடத்தப்பெற்றன. தஞ்சைத் தமிழ்த் தாய் அறக்கட்டளையால் நடத்தப்பெற்ற இம்மாநாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்க முனைவர் இராமநாதன், அவ்வை கலிய பெருமாள், உடையார்கோவில் குணா, நாகூர் சோமசுந்தரத்தேவர், திருச்சி தொழிலதிபர் இராசப்ப பாப்பு ரெட்டியார், பூண்டி கிருட்டினசாமி வாண்டையார், வழக்கறிஞர் இராமமூர்த்தி, பி. விருத்தாசலனார், முனைவர் திருமாறன், வடுவூர் சிவா, திரைப்படக் கவிஞர் சிநேகன், நடிகர் கணேசுபாபு, ஆ.வே. இராமசாமி, முனைவர் இளமுருகன் மற்றும் நூற்றுக்கணக்கான செம்மொழி நடைப்பயண ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

முதல்நாள் மாநாட்டில் தஞ்சை அரண்மனைத் திருக்கோவில் பரம்பரை அறங்காவலர் சத்ரபதி பாபாஜி ராஜாபான்ஸ்லே அவர்கள் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத் தலைவர் ப. இளவழகன் அவர்களுக்குத் "தமிழ்ச்சேவை விருது" வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுரை வழங்கினார்.

தில்லி உண்ணாநோன்புப் போராட்டத்தில் பங்கேற்ற புலவர் க. சுப்பிரமணியன், தமிழ்ச் சங்கத் தலைவர் ப. இளவழகன், தி.கோ. தாமோதரன், மீனாட்சி சுந்தரம் ஆகியோர்க்குச் 'செம்மொழிச் செம்மல்' விருதுகள் வழங்கிப் பாராட்டப்பட்டது.

# சங்கத் தமிழ் காத்த சான்றோர் சி. இலக்குவனார்

- இலக்குவனார் திருவள்ளுவன்

பேராசிரியர் முனைவர் சி.இலக்குவனார் அவர்கள், பல்துறை அறிஞராகவும், பல்வகை இயக்க முன்னோடியாகவும் திகழ்ந்தவர். எனவே அதற்கேற்பப் பல்வகைப் பட்டங்களும், அடைமொழிகளும் அவருக்குச் சூட்டப்பட்டுள்ளன.

பேராசிரியர் தம்முடைய சிறப்பான கல்விப் பணிகளால் பெரும்பேராசிரியர் என அழைக்கப் பட்டார். பெரும்பேராசிரியர் தொல்காப்பியப் புலமையும், ஆங்கிலத்தில் தொல்காப்பியத்தை முழுமையாக முதலில் மொழி பெயர்த்த நுண்மாண் நுழைபுலமும், "20ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர்" என அறிஞர் பெருமக்கள் அழைக்கக் காரணமாயிற்று.

இயல், இசை, நாடகம் ஆகிய முக்கலைகளும் நற்றமிழில் திகழப் பரப்புரைஞராகவும், படைப்பாளராகவும் இருந்து தொண்டாற்றிய செயல் திறத்தால், 'முத்தமிழ்க் காவலர்' என்னும் பட்டம் பெரும்பேராசிரியர் இலக்குவனார் அவர்களை அடைந்தது.

தமிழ் கற்பிக்கும் முறை, தொல்காப்பிய ஆராய்ச்சி, தொல்காப்பிய விளக்கம், திருக்குறள் எளிய பொழிப்புரை, வள்ளுவர் வகுத்த அரசியல், வள்ளுவர் கண்ட இல்லறம், அம்மூவனார் முதலிய நூல்கள் வாயிலாக மட்டுமல்லாமல் சங்க இலக்கியம், இலக்கியம், திராவிடக்கூட்டரசு, குறள்நெறி முதலான இதழ்கள் வாயிலாகவும் செந்தமிழ் சிறக்க வாழ்ந்தவர் பெரும் பேராசிரியர் இலக்குவனார். அதனால் "செந்தமிழ் மாமணி" எனவும் "இலக்கணச் செம்மல்" எனவும் பட்டங்கள் இவரைத்தேடி வந்து அணி செய்தன.

"கெடல் எங்கே தமிழின் நலம்? அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்க"

என்பதையே வாழ்க்கைப் பணியாகக் கொண்டு, தமிழ் உரிமைக்காகப் பல்வேறு போராட்டக் களங்களைச் சந்தித்தார் பெரும்பேராசிரியர் இலக்குவனார். அதனால் 'இரண்டாம் நக்கீரர்', 'தமிழ் அரிமா', 'தமிழ்ப் போராளி' என இவரை அழைத்து மகிழ்ந்தனர் தமிழ் ஆர்வலர்கள்.

கட்சி அரசியல் போராட்டங்களை ஒத்தி வைத்துவிட்டு, மொழிப் போராட்டத்தில் ஈடுபடப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாயிலாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆற்றுப் படுத்தியவர் பெரும்பேராசிரியர் இலக்குவனார் அவர்கள். எழுத்து, சொல், செயல் ஆகியவற்றின் மூலம் மாணக்கர்களையும், தமிழ் மக்கள் இடையேயும் இந்தியினால்வரும் கேட்டினைப் பரப்பி இரண்டாம் மொழிப்போர் நிகழ உழைத்தமை யாலும், வேலையை இழந்து சிறை வாழ்க்கையை மேற்கொண்டமையாலும் 'தமிழர் தளபதி', 'தமிழ் காத்த தானைத் தலைவர்', 'இந்தி எதிர்ப்புப் படைத் தளபதி', 'செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்', 'தமிழ் காத்த தானைத் தலைவர்' முதலியவாறான பட்டங்களை இவருக்கு வழங்கித் தமிழ் உலகம் களிப்புற்றது.

தன்மதிப்பு இயக்கப் பற்றின் காரணமாகவும், தமிழ் காக்கும் போராட்ட உணர்வு காரணமாகவும் 'தன்மானத் தமிழ் மறவர்' என அழைத்து தன்மதிப்பு இயக்கத் தோழர்கள் உவகை கொண்டனர்.

தமிழ்ப் பயிற்று மொழியை வலியுறுத்தி எழுதியும், பேசியும் வந்ததுடன் தமிழ் உரிமைப் பெருநடைப் பயணம் மேற்கொண்டமையால், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறை வைக்கப்பட்டார். இதனால் 'பயிற்சி மொழிக் காவலர்' எனவும் 'தமிழ்ப்பயிற்சி மொழி ஏந்தல்' எனவும் பட்டங்கள் சூட்டி கல்வியாளர்களும், பாவாணர்களும் பெருமகிழ்வு கொண்டனர்.

இவை தவிர, தமிழ் கல்வி மொழியாகவும், அலுவலக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும், ஆலய மொழியாகவும், எங்கும் எதிலும் தமிழே இருக்க அயராது உழைத்துப் போர்க்களமாகத் தன்

வாழ்க்கையை அமைத்துக் கொண்டமையால் 'முத்தமிழ்ப் போர்வாள்', 'முதுபெரும்புலவர்', 'தமிழ் இயக்கக் காவலர்', 'தமிழ் இயக்கம்', 'குறள் நெறிக் காவலர்', 'தொல்காப்பியச் செம்மல்', 'தமிழ் அன்னை', 'தமிழ்த்தாய்' என மிகப் பலவாறாக ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும், பாவலர்களாலும், நாவலர்களாலும், தலைவர்களாலும், தொண்டர்களாலும் அகங்குளிர அழைக்கப் பெற்றவர் பெரும்பேராசிரியர் திரு. இலக்குவனார் ஆவார்.

இவை எல்லாவற்றையும் விட இலக்குவனார் அவர்கள் 'சங்கத் தமிழ் காத்த சான்றோர்' என்பதே இன்றைக்குப் பலர் அறியாத செய்தியாக உள்ளது.

தமிழர்களின் அறியாமையாலும், அயலவர் வஞ்சகத்தாலும், கரையான்களுக்கும், அனலுக்கும், புனலுக்கும், மண்ணுக்கும் இரையானவை போக எஞ்சிய தமிழ் இலக்கியச் செல்வங்கள் சிலவற்றையாவது மீட்டுத் தந்த பெருமைக் குரியவர்கள் பழந்தமிழ் நூற்பதிப்பு முன்னோடி அறிஞர் தாமோதரனார் அவர்களும் சங்கத் தமிழ் நூல்பதிப்புச் சான்றோர் அறிஞர் உ.வே. சாமிநாதனார் அவர்களும் ஆவர். இவ்விருவரின் அரும்பெரும் முயற்சிகள் முன்னோடியாக அமைந்திராவிடில் இன்றைக்கு நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் இலக்கியங்களும் இல்லாமல் போய் இருந்திருக்கும். இவர்களால், மீட்டுருவாக்கப் பெற்ற சங்க இலக்கியங்களையாவது நம்மவர்கள் போற்றிப் பேணினார்களா? தடி எடுத்தவன் தண்டல்காரன், தமிழ் பேசத் தெரிந்தவன் எல்லாம் தமிழ் அறிஞன் என எண்ணிக் கொண்டு இவற்றை ஒழித்துக் கட்டத் தமிழின் பெயராலேயே தமிழர்கள் மூலமாகவே ஒரு கூட்டம் கிளம்பிற்று. அதனைத் தடுத்துப் புலவர் இடையே நடமாடிய சங்கத் தமிழை மக்களிடையே உலவச் செய்து வெற்றி கண்டவர் பெரும் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள்.

இதற்கு அடிப்படையாய் அமைந்த நிகழ்வினை பேராசிரியர் அவர்களின் பின்வரும் வரிகளின் மூலம் காணலாம்.

"திருநெல்வேலி மக்கள் தமிழ்ப்பற்று மிகுந்தவர்கள். தமிழாசிரியர்களை மதிப்பவர்கள். யான் வாழ்ந்த ஊர்களில் திருநெல்வேலியே தமிழ்ப்புலவர்களைப் போற்றும் ஊர் என *அறிந்துள்ளேன்.*

இரசிகமணி சிதம்பரநாத முதலியார் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்குத் தமிழ்ப்பற்றும் புலமையும் உண்டு. நகைச்சுவை பொருந்தச் சொற்பொழிவாற்றும் ஆற்றல் படைத்தவர். ஆனால் தனித்தமிழை வெறுப்பவர். தமிழாசிரியர்களைப் பகைவராகக் கருதுபவர். தூயதமிழை விரும்பும் தமிழ்ப் புலவர்கள் ஏதும் அறியாதவர்கள் என எங்கும் நகையாடுபவர். அவர் தலைமையில் வட்டத்தொட்டி எனும் பெயருடன் கழகம் அமைத்துத் தமிழாய்ந்தனர். வட்டத் தொட்டிக் குழுவினர் முதன்மையாக இருந்து கம்பர் விழா ஒன்று நடத்தினர். அவ்விழாவில் சொற்பொழிவாற்றிய முனைவர் திரிமூர்த்தி என்பவர் 'சங்க இலக்கியங்களை வங்காளக்குடாக் கடலில் போட வேண்டும். இரும்புக் கடலை போன்ற அவை யாருக்கு வேண்டும்?" எனக் குறிப்பிட்டார். அங்குக் கூடியிருந்த தமிழர் கைகொட்டி ஆர்ப்பரித்து அவ்வுரையை வரவேற்றனர்.

சங்க இலக்கியத்தின் இனிமையை அறியாததனால் அவ்வாறு செய்தனர். கம்பரே சங்க இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றவர் என்பதனையும், அவர் அறியார். சங்க இலக்கியக் கடலில் மூழ்கி எழுந்ததனால்தான் இராமாயணத்தை இனிய தமிழில் அவரால் எழுத இயன்றது என்பதனையும் அறிந்திலர். சங்க இலக்கியக் காலமே தமிழிலக்கியத்தின் - ஏன் தமிழர்களின் பொற்காலம்! இருபதாம் நூற்றாண்டின் மேலை நாட்டு உயர்ந்த இலக்கியங்களோடு, ஒப்பிட்டு எண்ணத்தகும் பெருமை படைத்தவை அவை. இயற்கையையும் மக்கள் வாழ்வையும், அடிப்படையாகக் கொண்டு இயற்றப் பட்டவை. உயர்நலமும், இனிமையும் எழிலும் கொண்டு விளங்கும் சங்க இலக்கியமாம் தமிழர் கருவூலத்தைக் கடலில் கொட்ட வேண்டுமென்று ஒருவர் கூறுதலும், அதனைத் தமிழர்களே வரவேற்றலும் என்ன பேதமை! சங்க இலக்கியத்தைக் கற்று அதன் இயல்பை அறியாததனாலன்றோ இவ்விழிநிலை. ஆகவே சங்க இலக்கியத்தைப் பற்றி மக்கள் அறியுமாறு செய்தலே என் கடனாகும் என்று கருதினேன். கம்பரின் அன்பர்கள் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம் என்ற முழக்கத்தைக் கொண்டிருந்தனர். சங்கத் தமிழ் பாடித் தமிழர் புகழ் வளர்ப்போம் என்ற முழக்கத்தை யான் மேற்கொண்டேன்.

'சங்க இலக்கியம்' என்னும் பெயருடன் வார ஏடு ஒன்று தொடங்கினேன். சங்க இலக்கியம், சங்க இலக்கியப் பாடல்களுக்கு விளக்கமும், சங்க காலத் தமிழ் மக்களின் வரலாற்றுச் செய்திகளும் தாங்கி வெளிவந்தது. மாணவர்களிடையேயும், பொது மக்களிடையேயும் தமிழ் எழுச்சி உண்டாக அவ்வேடு பெரிதும் துணை புரிந்தது. சங்க இலக்கியம் பற்றி ஏனைய இதழ் ஆசிரியர்களும், கற்றவர்களும் எண்ணத் தொடங்கினர். புலவர்கட்கு மட்டும் அறிமுகமாகியிருந்த சங்க இலக்கியம் பொது மக்கள் முன்னிலையிலும் வரத் தொடங்கியது. இரும்புக் கடலை என இகழப்பட்ட பாடல் இன்சுவை அமுதாகக் கருதப்பட்டது".

இவ்வாறு பெரும்பேராசிரியர் இலக்குவனார் தூயதமிழ்ப்பற்றை மக்களிடையே வளர்த்தலை யும், சங்க இலக்கியத்தைப் பரப்புவதையும் கடமையாகக் கொண்டு தமிழிலும், ஆங்கிலத்திலும் இதழ்கள் நடத்திச் சங்கத் தமிழைக் காத்து மக்களிடையே பரப்பினார். மேலும், பிற படைப்பாளிகளுக்கும், பேச்சாளர்களுக்கும் தம் ஆசிரியர்களுக்கும், தம் மாணாக்கர்களுக்கும், தோழர்களுக்கும் மடல் வழி எழுதியும், நேரில் தெரிவித்தும், சங்க இலக்கியம் சார்ந்த கதை கட்டுலை நாடகம், பாடல்கள் முதலியவற்றை படைக்குமாறு வலியுறுத்தி அமைதி இயக்கம் ஒன்றை நடத்தினார். இதன் வாயிலாக நாவலர்களும், பாவலர்களும், எழுத்தாளர்களும், இதழாளர்களும் செந்தமிழைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டவர்களும் சங்க இலக்கியச் செய்திகளைக் கருப்பொருளாகக் கொண்டு தம் பணிகளைத் தொடந்தனர். இவ்வாறு இன்றைய சங்க இலக்கிய எழுத்தோவியங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தமையால் இன்றைக்குச் சங்கத் தமிழ்க் கலை மேடைகளில் மட்டுமல்லாமல் கணிணி உலகிலும் இடம் பெற்றுவிட்டது.

அன்றைக்குத் தமிழ்ப்போராளி பெரும் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் அமைதியாக இருந்திருந்தால், சங்கத் தமிழைத் தமிழ் உலகம் மறந்தே போயிருந்திருக்கும். பதிப்பு அறிஞர்களின் கடும் முயற்சியால் மீட்டுருவாக்கம் பெற்றவையும் மறைந்தே போயிருக்கும். தமிழ்ப்பண்பாட்டு வரலாற்று நாகரிகச் சிறப்புகள், அரசியல் வினைத்திறன் ஆசியவற்றின் கருவூலமான சங்கத்தமிழ் விளக்கு இன்றிப் பழந்தமிழர் வாழ்வு துலங்காமல் இருட்டிலேயே மூழ்கி இருந்திருக்கும். அவ்வாறு இல்லாமல் தக்க நேரத்தில் சினந்து எழுந்து, கிளர்ந்து, ஆற்றுப்படுத்திச் சங்கத் தமிழை மக்கள் தமிழாக உலவ விட்ட பெரும் பேராசிரியர் இலக்குவனார் அவர்களைச் சங்கத் தமிழ் காத்த சான்றோர் எனக் கூறல் முற்றிலும் பொருத்தமன்றோ?

இலக்குவனார் வழி நின்று இன்தமிழ் காப்போம்!



## கவிஞர் முருகுவண்ணன் பிறந்தநாள்

முத்தமிழ்வாணர் முருகுவண்ணன் தமது 80ஆம் ஆண்டு பிறந்தநாளை எளிய முறையில் சென்னை பெரம்பூரில் உள்ள தமது இல்லத்தில் கொண்டாடினார். அப்போது அவர் இல்லம் சென்று வாழ்த்திய நமது கவிக்கொண்டல் சிறப்பாசிரியர் திரு.சா.கணேசன், கொளத்தூர் செ.சின்னராசு ஆகியோருடன் முருகுவண்ணன்-காமாட்சி இணையர் படத்தில் உள்ளனர்.